செ.வெ.எண் : 16/நவம்பர் நாள் : 16.11.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## வாக்காளர் சுருக்கத் திருத்த பணிகள் மேற்கொள்வதற்கு வரைவு வாக்காளர் பட்டியல்

## மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (16.11.2020) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், வாக்காளர் சுருக்கத் திருத்தப் பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

அதன்பின்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரைவு வாக்காளர் பட்டியலில் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி, திருவாடானை, இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1369 பாகத்தில் 5,68,014 ஆண் வாக்காளர்களும் 5,70,306 பெண் வாக்காளர்களும் 63 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 11,38,383 வாக்காளர்கள் உள்ளனர். இதற்கு முன்பாக 14.02.2020 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி 4 சட்டமன்ற தொகுதியில் உட்பட்டு 5,67,307 ஆண் வாக்காளர்களும் 5,69,193 பெண் வாக்காளர்களும், 69 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 11,36,569 வாக்காளர்கள் இருந்தனர்.

14.02.2020 முதல் 31.10.2020 வரை பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் சுருக்க திருத்தத்தின் மூலம் 3,626 ஆண் வாக்காளர்களும் 4,043 பெண் வாக்காளர்களும், 2 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 7,671 நபர்கள் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதேபோல 2,919 ஆண் வாக்காளர்களும் 2,930 பெண் வாக்காளர்களும், 8 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 5,857 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இன்று வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியல் வாக்குப்பதிவு அதிகாரிகளின் அலுவலகங்கள் மற்றும் உதவி வாக்குப்பதிவு அலுவலர்களின் அலுவலகங்கள், வாக்குச்சாவடி அமைப்புகளிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். பொதுமக்கள் இந்த வரைவு வாக்காளர் பட்டியலை பார்வையிட்டு தங்களை விவரங்களை அறிந்து கொள்ளலாம். மேலும் இவ்வரைவு வாக்காளர் பட்டியலை இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான www.elections.tn.gov.in மற்றும் www.nvsp.in -ல் பொதுமக்கள் அனைவரும் சரிபார்த்துக் கொள்ளலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தற்போதைய வரைவு வாக்காளர் பட்டியலின்படி தொகுதி வாரியான வாக்காளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு உள்ளது.

| சட்டமன்ற தொகுதி | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | மூன்றாம் பாலின வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|
| பரமக்குடி(தனி) | 1,23,498 | 1,25,006 | 13 | 2,48,517 |
| திருவாடானை | 1,42,432 | 1,41,963 | 22 | 2,84,417 |
| இராமநாதபுரம் | 1,49,456 | 1,51,378 | 21 | 3,00,855 |
| முதுகுளத்தூர் | 1,52,628 | 1,51,959 | 7 | 3,04,594 |
| மொத்தம் | 5,68,014 | 5,70,306 | 63 | 11,38,383 |

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆ.சிவகாமி,இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு உட்பட அரசு அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**